பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 166
வியாழக்கிழமை 11 மே 2023
சித்திரை 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# ஜனாதிபதி பதவி ரணிலுக்கு; பிரதமர் பதவி பஸிலுக்கு?



★ மூடிய அறைக்குள் 'டீல்'

★ மஹிந்த தரப்பினரை ஓரங்கட்ட முயற்சி?

★ கொழும்பு அரசியலில் பரபரப்பு



**கொழும்பு, மே 11**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையே கடந்தவாரம் மூடிய அறைக்குள் இரகசிய சந்திப்பொன்று நடந்துள்ளது என்று அறியமுடிகின்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்க ஆதரவு வழங்கப்படும் என்றும், பிரதமர் பதவி பஸில் ராஜபக்சவுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. இந்த இரகசிய சந்திப்பு கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.** »11



## கிளிநொச்சியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

கிளிநொச்சி, மே 11
முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் »11

## காணிகளைப் பாதுகாக்க உடனே அடையாளமிடுக!

### வலி.வடக்கு மக்களிடம் பிரதேச செயலகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 11
வலிகாமம் வடக்கில் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தங்கள் காணிகளை அடையாளப்படுத்தி, தங்களுக்குச் சொந்தமான உடைமைகளைப் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளாதிருக்கும் காணி உரிமையாளர்கள் உடனடியாக »11

## புதிய ஆளுநர்களின் பெயர்கள் பரிந்துரை!

கொழும்பு, மே 11
வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான ஆளுநர்கள் பதவி விலக வேண்டும் என்று அரசாங்கத்தால் பணிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் விலகியதும் புதிய ஆளுநர்கள் நால்வரை நியமிப்பதற்கு »11

## வீதியில் சென்ற பெண்ணிடம் பல இலட்சம் ரூபா கொள்ளை

### மோ.சைக்கிளில் வந்தோர் கைவரிசை

முல்லைத்தீவு, மே 11
தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத்தில் (ஏ.ரி.எம்.) பணம் எடுத்துச் சென்ற பெண்ணிடம், மோட்டார்சைக்கிளில் வந்தவர்கள் »11

## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் ஜனக!

கொழும்பு, மே 11
பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க 2024 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று கூறப்படுகின்றது.
கடந்த காலங்களில் அவர் பேசு பொருளாகத் திகழ்ந்தவர். மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் பரீட்சை எழு »11



## ஆதிலிங்கேஸ்வரருக்கு 108 கும்ப சங்காபிஷேகம்

வவுனியா, மே 11
வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய 108 கும்ப சங்காபிஷேகம் நேற்று நடைபெற்றது. வவுனியாவில் உள்ள வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் கடந்த மார்ச் மாதம் இனந்தெரியாதோரால் இடித்து அழிக்கப்பட்டது. இது தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக கடந்த மாதம் 28ஆம் திகதி விக்கிரகங்கள் மீண்டும் எழுந்தருளச் செய்யப்பட்டன. அதன்பின்னர் தொடர்ச்சியாக 12 நாள்கள் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. »11

## இலங்கை வரும் ஐ.எம்.எப். குழு!

கொழும்பு, மே 11
சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் குழுவொன்று இன்று இலங்கை »11

### வெடுக்குநாறி மலையில் ஏணி பொருத்திய வழக்கு;

## கால அவகாசம் கோரியது சட்டமா அதிபர் திணைக்களம்

யாழ்ப்பாணம், மே 11
வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்ல ஏணி பொருத்தப்பட்டமை தொடர்பில் வவுனியா பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று வவுனியா நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆளுநர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியிடமே முழு முடிவும்

## அமைச்சர் பந்துல நழுவல்



**கொழும்பு, மே 11**

**ஆளுநர்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. இந்த விடயம் அவரது முழுமையான முடிவுகளுக்கு உட்பட்டது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

வடமேல், கிழக்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண ஆளுநர்களை பதவி விலகுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக கடந்தவாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு ஆளுநர்கள் பதவி விலகிய பின்னர் அந்தப் பதவிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களே நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவையின் பேச்சாளர் பந்துலவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுநர்களின் நியமனம், பதவி நீக்கம் என்பன எம்முடன் தொடர்புடைய விடயமல்ல.

அவை முழுமையாக ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களாகும். ஆளுநர்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுபவர்களாவர்.

எனவே, அது குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கான முழுமையான உரிமையும், அதிகாரமும் அவருக்கு மாத்திரமே காணப்படுகிறது - என்றார். (ம)

# தாதியர் பல்கலைக்கழகம் இலங்கையில் உருவாக்கம்

## ஆராய குழு நியமிப்பு

கொழும்பு, மே 11

தற்போது சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தாதியக் கல்லூரியை பல்கலைக்கழகமாக மாற்றியமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான சட்டவரைவு தயாரிப்பதற்கு பதில் கல்வியமைச்சராக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய தாதியக் கல்லூரியை பல்கலைக்கழகமாகக் மாற்றியமைத்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை ஆராய அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு இந்த அதிகாரிகள் குழு, இலங்கை தேசிய தாதியப் பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்கு கொள்கை ரீதியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் என அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-இ)

# ரயில் நிலைய அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை!

கொழும்பு, மே 11

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதிப் பொதுமுகாமையாளர் பதவிக்கு அதிகாரியொருவரை நியமிப்பது தொடர்பான பிரச்சினையை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நேற்றுக் காலை 5 ரயில் சேவைகள் கைவிடப்பட்டன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

# உள்ளூராட்சி முறைப்பாட்டிலக்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 11

வடமாகாணத்துக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஏதேனும் முறைப்பாடுகள் காணப்படின் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கொட்லைன் இலக்கமான 070 7213728 என்ற இலக்கத்துக்கு அலைபேசி ஊடாகவும், வட்ஸப், வைபர் செயலிகள் மூலமும் 24x7 மணி நேரமும் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவித்துக் கொள்ளமுடியும் என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். (ஒ-14)

# ராஜபக்சக்கள் வீழ்ச்சி கொண்டாடத் தடை!

கொழும்பு, மே 11

ராஜபக்ச சகோதரர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்த மே 9 வன்முறையை நினைவுகூரும் நிகழ்ச்சிகளுக்கு நீதிமன்று தடை விதித்துள்ளது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால் கொந்தளிப்புக்குள்ளான அந்த நாட்டு மக்கள் அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக கடந்த ஆண்டு போராட்டத்தில் குதித்தனர்.

பல மாதங்களாக அமைதியாக நடந்து வந்த நிலையில் கடந்த ஆண்டு மே 9 ஆம் திகதி அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் போராட்டக்காரர்களை தாக்கினர். அதனால் வன்முறை வெடித்தது. மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியைத் துறந்தார். போராட்டங்கள் தொடர்ந்த நிலையில் நாட்டைவிட்டு கோத்தாபய ராஜபக்ச தப்பியோடினார்.

இந்தநிலையில் ராஜபக்ச சகோதரர்களின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த மே - 9 வன்முறையை நினைவுகூரும் நிகழ்ச்சிகளை நடத்த போராட்டக்குழுக்கள் முடிவு செய்தன.

ஆனால் இந்த நிகழ்ச்சிகளுக்கு தடைவிதிக்க வேண்டும் என பொலிஸார் கொழும்பு கோட்டை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிமன்று, நினைவுகூரும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழு பல்வேறு இடங்களுக்குள் பிரவேசிப்பதற்கு தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. (ச-இ)

# பெரமுனவிலிருந்து 15 பேர் எதிர்க்கட்சிக்குத் தாவுவர்!

## கொழும்பு ஊடகங்கள் தகவல்

கொழும்பு, மே 11

பொதுஜன பெரமுனவின் பக்கமாக இருந்து 15 பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவ்வாறு இணையவுள்ள 15 எம்.பி.க்களில் நால்வருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இரு தரப்புக்கும் நன்கு பரிச்சயமான ஒருவரின் இல்லத்தில்தான் அந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

விரைவில் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், அதனையொட்டி அரசுக்குள் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன என்றும் அந்த நால்வரும் சஜித்திடம் கூறியுள்ளனர். 15 பேரும் நேராக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையப் போகிறீர்களா? அல்லது கூட்டணியாக இணையப் போகிறீர்களா? என்று கூடிப் பேசி ஒரு முடிவை எடுங்கள் என்று அவர்களிடம் சஜித் தெரிவித்துள்ளார். ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு இரவு விருந்துடன் நிறைவு பெற்றது. அடுத்த சந்திப்புக்கான திகதியும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது என்றும் அந்த ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம-22)

# கொன்சியூலர் சேவைகள் கணினிக்கோளாறால் மட்டுப்பாடு

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மே 11

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவின் கணினி அமைப்பின் செயலிழப்பு காரணமாக ஆவண அங்கீகார செயன்முறை மறுஅறிவித்தல் வரை மட்டுப்படுத்தப்படுகிறது என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மாத்தறை, கண்டி, குருநாகல் பிராந்திய அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆவண அங்கீகார செயன்முறைகளிலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது.

தற்போது மிகவும் அவசரமான ஆவணங்களுக்கு மட்டுமே கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு அங்கீகாரமளித்துள்ளது. ஏனைய கொன்சியூலர் சேவைகள் எந்தவித தடங்கலும் இன்றி தொடர்கின்றன.

கணினி பழுதுபார்க்கப்படும் நடவடிக்கைகள் துரிதமாகக் முன்னெடுக்கப்படுகின்றன.

அங்கீகார செயன்முறை முழுமையாக பொதுமக்களுக்கு அறியத்தரப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சட்ட நியமங்களை மீறும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு

## ஐ.நா. அறிக்கையாளர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, மே 11**

**பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாகக் காணப்படவேண்டியது அவசியமானதாகும். அவ்வாறு அல்லாமல் கொண்டுவரப்படும் சட்டங்களால் மனித உரிமை மீறல்களே அதிகளவில் இடம்பெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவில் உள்ளடங்கியுள்ள கரிசனைக்குரிய விடயங்கள் குறித்து சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். உங்களுடைய அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திலும், கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைதொடர்பானஐ.நா. விசேட அறிக்கையாளரின் அறிக்கையிலும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் காணப்படும் கரிசனைக்குரிய விடயங்களை நீக்குவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் எவையென்பது பற்றி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அர்த்தமுள்ளவகையிலும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவும் திருத்தியமைப்பதற்கு ஆதரவளிக்கும் நோக்கிலேயே அத்திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டன. பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் ஊடாகப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கு உங்களது அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முயற்சியைப் பாராட்டும் அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் நாம் ஏற்கனவே வெளிப்படுத்திய கரிசனைகளைத் தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு தொடர்பிலும் முன்வைக்கின்றோம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான புதியசட்டமொன்றைக்கொண்டு வருவதாயின், அந்தச்சட்டம் சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவானதாகக் காணப்படும் அதேவேளை தீவிர மனித உரிமை மீறல்கள், போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை மீதான முடக்கம், தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல் என்பவற்றுக்கு வழிவகுத்த முன்னைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கூறுகள் நீக்கப்பட்டோ அல்லது மறுசீரமைக்கப்பட்டோ இருப்பது அவசியமாகும்.

இருப்பினும் இந்தத்தேவைப்பாடுகளை உரியவாறு பூர்த்தி செய்யாமல் புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவதன் மூலம் பயங்கரவாதத்தை செயற்றிறன்மிக்கவகையில் கட்டுப்படுத்தமுடியாது. அதேவேளை, எதிர்வரும் காலங்களில் மனித உரிமை மீறல்கள் வெகுவாக அதிகரிப்பதையும் தடுக்கமுடியாது. ஆதலால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் அர்த்தமுள்ள மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியத்தை உங்களது அரசாங்கத்திடம் மீள வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம)

## முட்டை விலை மேலும் சரியும்

கொழும்பு, மே 11

முட்டைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை விட முட்டைகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்யமுடியும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. அதற்கமைய அதிக விலை கொடுத்து முட்டைகளை வாங்கவேண்டாம் என நுகர்வோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு வெள்ளை முட்டை மொத்த விலையில் 40 ரூபாவுக்கும், பழுப்பு முட்டை 41 ரூபாவுக்கும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

வெள்ளை முட்டை ஒன்றுக்கு 44 ரூபாவும், பழுப்பு நிற முட்டை ஒன்றுக்கு 46 ரூபாவும் நுகர்வோர் அதிகாரசபை கட்டுப்பாட்டு விலையை பிறப்பித்துள்ளபோதிலும் இம்மாத இறுதிக்குள் முட்டையின் விலை மேலும் குறைவடையும் என இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இதுவரை 4.5 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (ச-இ)

## 16 மாணவிகளிடம் ஆசிரியர் சேட்டை!

### பொலிஸார் விசாரணை

மாலைநேர வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர் ஒருவர் 16 மாணவிகளை துஷ்பிரயோகம் செய்ததாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். களுத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் சூம் வகுப்புகளின்போது மாணவிகளுக்கு பாலியல் அச்சுறுத்தல் விடுத்து தனது கைத்தொலைபேசியில் பதிவு செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது. மாணவிகள் பெற்றோருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

முறைப்பாடுடுக்கமைய களுத்துறை பொலிஸ் பிரிவு குற்றத்தடுப்பு அதிகாரிகள், அந்த ஆசிரியரைக் கைதுசெய்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

# இறந்தவர்களின் பெயரிலுள்ள 'சிம்' அட்டைகளை அகற்றுக!

யாழ்ப்பாணம். மே. 11

இறந்தவர்களின் பெயரில் உள்ள கையடக்கத் தொலைபேசி 'சிம்' அட்டைகளை, உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அனைத்து பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இறந்தவரின் பெயரில் உள்ள சிம் அட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாலேயே, ஒருவர் இறந்ததும் குறிக்கப்பட்ட காலத்துக்குள் அந்த நபரின் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து சிம் அட்டைகளையும் பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (ம-9)




**நாய் நன்றியுள்ள பிராணி எண்டு எல்லாருக்கும் தெரியும். ஆனால், அந்த நாயில நன்றியுள்ள மனிசரக் காணுறது அரிதிலும் அரிது. ஆனால் நாய்களை மனிசருக்குச் சமமா மதிச்சு, அதுகளில நன்றியக் காட்டுற ஒரு கொம்பனியே எங்கட நாட்டில அதுவும் வவுனியா குருமன்காட்டில இருக்கு எண்டது எங்கள் எல்லாருக்கும் பெருமையான ஒரு விசயம்தான்.**

**அப்பிடி என்னதான் அவை செய்யினம் எண்டு அறிய உங்களுக்கு கடும் ஆர்வமா இருக்கும். அதை விளங்கிக் கொள்ளுற தெண்டால் ஒரு சம்பவத்தை உங்களுக்குச் சொல்லவேணும். வவுனியா குருமன் காட்டில இரத்தம், மலம், சலம் சோதிக்கிற ஒரு 'லாப்' இருக்குது. கூடுதலா சனம் அந்த 'லாப்பில' தான் டொக்டர்மார் எழுதிக் குடுக்கிற ரத்தப்பரிசோதனையள் செய்யிறவை. இப்ப என்ன விசயம் எண்டால், அந்த 'லாப்புக்கு' ஒருத்தர் தன்ர ரத்தத்தைச் சோதிக்கிறதுக்கு போயிருக்கிறார். அப்ப அங்க இன்னொருத்தர் தன்ர நாயோட வந்திருக்கிறார். வந்தவர் 'என்ர நாய்க்குச் சுகமில்லை. அதுக்கு ரத்தம் சோதிக்கவேணும் எண்டு டொக்டர் சொல்லுறார்' எண்டு சொல்லிட்டு டொக்டர் எழுதிக்குடுத்த துண்டை அந்த 'லாப்பில' நிண்டவையிட்டக் குடுத்திருக்கிறார். அவையும் துண்டை வாங்கிப் பார்த்திட்டு, நாயில ரத்தத்தை எடுத்திட்டு, ரிசல்டுக்கு கொஞ்சம் பொறுத்து வரச் சொல்லியிருக்கினம்.**

**இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த, தன்ர ரத்தத்தைச் சோதிக்கப்போனவருக்கு பக்கெண்டு போட்டுது. 'இதென்னடா நாய் ரத்தத்தையும், எங்கட ரத்தத்தையும் ஒரே லாப்பில சோதிக்கிறாங்கள்?' எண்டிட்டு ரத்தத்தை சோதிக்காமலே அங்க இருந்து நழுவிட்டார். பிறகு வெளியில விசாரிச்சால் வழக்கமாவே அந்த 'லாப்' காரர் இப்பிடி நாயளின்ர ரத்தத்தை அங்க சோதிக்கிறவை எண்டு தெரிஞ்சிருக்கு. தனக்குத் தெரிஞ்ச டொக்டர்மாரிட்ட 'இப்பிடி நாய் ரத்தத்தையும், மனிசரின்ர ரத்தத்தையும் ஒரே 'லாப்பில' சோதிக்கலாமோ?' எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அவை அப்பிடிச் செய்யவேகூடாது. உடன கொம்பிளைண்ட் பண்ணுங்கோ' எண்டிருக்கினம். இவரும் உரிய இடங்களுக்கு முறைப்பாடு செய்திருக்கிறார். பாப்பம் எதும் நடவடிக்கை எடுப்பினமோ எண்டு.**

- ப்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 11

வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயங்களின் பாடசாலைகளில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவிகளுக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த தகைமையுள்ள அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பாடசாலை வகை IIஐச் சேர்ந்த நொச்சிமோட்டை அ.த.க.பாடசாலை, பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், வகை III ஐச் சேர்ந்த ஆயிலடி அ.த.க.பாடசாலை ஆகியவற்றிலும், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் பாடசாலை வகை II ஐச் சேர்ந்த இராசேந்திரகுளம் அ.த.க.பாடசாலை, அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம், முதலியார்குளம் றோ.க.த.க.பாடசாலை, பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தியாலயம், வகை III ஐச் சேர்ந்த பூசணிப்பிட்டி தாயுமானவர் வித்தியாலயம், பெரியதம்பனை அ.த.க.பாடசாலை, பாரதி வித்தியாலயம், கிறிஸ்தவகுளம் அ.த.க.பாடசாலை ஆகியவற்றிலும் காணப்படும் அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது வலயக் கல்விப் பணியகங்களில் விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14,9)

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.மாவட்டத்தின் மிகவும் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாக 11 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற் சவத்தில், எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்குத் திருமஞ்சத் திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்குச் சப்பறத் திருவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 24 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், இரவு 11 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என்று ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. சோ. அரவிந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ஓ-14,66)

# தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 27 ஆவது வருட நிறைவையொட்டி மாவட்ட தாச்சி விளையாட்டு அணிகளிடையே நடத்தப்பட்ட தாச்சி விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டியும் பரிசில்கள் வழங்கலும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி தென்றல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் தாவடி காளி அம்பாள் அணியும், புதுமடம் வைகறை அணியும் களமிறங்கவுள்ளன. சங்கத் தலைவர் பீ.ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் எஸ்.முரளிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-14,9)

# கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு நன்கொடையாளர்களின் உதவியுடன் யாழ்.போதனா மருத்துவமனையில் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வரணி பிரதேச மருத்துவமனையிலும் சங்கானை பிரதேச மருத்துவமனையிலும் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் கண்பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-14)

## 11 வயதில் முதுகலைப் பட்டம்

# ஸ்ரீபன் ஹக்கிங்கை விஞ்சிய சிறுமி



மெக்சிக்கோ, மே 11

மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த ஒட்டிசம் பாதித்த அதாரா பெரெஸ் சான்செஸ் என்ற 11 வயதுச் சிறுமி முதுகலைப் பட்டம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இவருக்கு 3 வயது இருக்கும்போது ஒட்டிசம் பாதிப்பு இருப்பது தெரியவந்தது. இதனால் இந்தச் சிறுமியால் மற்றவர்களுடன் சகஜமாக பழக முடியாது நெருக்கடிகளை எதிர்கொண்டார். மனஅழுத்தத்துக்கு ஆளான அதாரா, தனது அறிவுத்திறனை வளர்த்து 5ஆவது வயதில் 8ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

அவரது அறிவுத்திறன் விஞ்ஞானி ஸ் ரீபன் ஹக்கிங் போன்ற மேதைகளுக்கு இருந்த அறிவுத்திறனைவிட அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. அவர் தனது 10ஆவது வயதில் மெக்சிகோ தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் இன்டஸ்ட்ரியல் பொறியியல் பட்டத்தை முடித்தார். தற்போது தனது 11 வயதில் சிஸ்டம்ஸ் இன்ஜினியரிங் பிரிவில் முதுநிலை பட்டத்தை அதாரா பெற்றுள்ளார்.

தற்போது அவர் பேச்சாளராகவும் மாறி, பல நிகழ்ச்சிகளுக்குச் சென்று உரையாற்றுகிறார். அத்துடன் மெக்சிகோ விண்வெளி நிறுவனத்தில் தற்போது பணியாற்றி வருகிறார். ஒரு நாள் நாசாவில் பணியாற்றுவதே தனது கனவு என அதாரா தெரிவித்துள்ளார். (ச-இ)

# அலைபேசி இலக்கமில்லாது ருவிற்றரில் உரையாடலாம்

அறிமுகப்படுத்தும் மஸ்க்

வொஷிங்டன், மே 11

ருவிற்றரில் விரைவில் குரல் மற்றும் காணொலி அழைப்புகளில் உரையாடும் வசதி அறிமுகம் செய்யப்படும் என எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் கடந்தாண்டு ருவிற்றரை வாங்கி அதிரடி மாற்றங்களை மேற்கொண்டு வருகிறார்.



தற்போது ருவிற்றரில் தொலைபேசி இலக்கம் இல்லாமல் குரல் வழி மற்றும் காணொலி வழி அழைப்புக்களில் உரையாடும் வசதியை அந்த நிறுவனம் கொண்டு வருகிறது என அறிவித்துள்ளார். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரிய அனுகூலம் மிக்க நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். செலவு களைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. தந்தையின் உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல்நலனில் கவனம் தேவை.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு நன்மை உண்டாகும்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். தொழில்கள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். மகிழ்ச்சி அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மீனம்:** கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
# உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முள்ளிவாய்க்கால் கஞ்சியும் ஒரு நினைவேந்தல் ஆயுதமே!

உணவைக்கூட ஒரு நினைவேந்தல் கருவியாக மாற்றமுடியும் என்பதை உலகின் சில நாடுகள் உணர்த்தி நிற்கின்றன. அவற்றுள் முக்கியமானது ஆர்மேனியா. 1915 இல் துருக்கிப் படைகள் ஆர்மேனியாவின் ஆறு கிராமங்களை 43 நாட்களாக முற்றுகையிட்டுத் தாக்கியபோது, அதற்குள் சிக்கியிருந்த மக்களுக்கும், ஆர்மேனியப் படைகளுக்கும் உயிரைத் தக்கவைக்க உதவியது 'ஹரிஸ்ஸா' என்ற உள்ளூர் உணவுப்பொருள்தான். தம் மீதான துருக்கியின் இனப்படுகொலையை நினைவேந்தும் வகையில் இன்றளவும் ஆர்மேனியர்கள், 'ஹரிஸ்ஸாவை' ஒரு நினைவேந்தல் உணவாக, இனப்படுகொலை நிகழ்ந்த காலத்தில் உண்டுவருகின்றனர். இதே ஹரிஸ்ஸாவைப் போன்றதே முள்ளிவாய்க்கால் கஞ்சியும். இறுதிபோர்க்காலத்தில் அங்கு சிக்குண் டிருந்த மக்களின் பசியைத் தீர்த்து,உயிரைக் காத்த உணவு முள்ளிவாய்க்கால் கஞ்சிதான். எனவேதான் தமிழினத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையை நினைவுகூர, இனப்படுகொலை வாரத்தில் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை மக்களுக்கு பகிர்ந்து வழங்கி, அருந்துதல் ஒரு மரபாக மாறிவருகின்றது.

வலிசுமந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கல் செயற்றிட்டம் தமிழர் தாயகம் எங்கும் முன்னெடுக்கப்படவுள்ளது. கடந்த காலங்களிலிருந்து இம்முறை மாணவர்கள் முன்னெடுக்கும் நினைவேந்தல் முற்றிலும் வேறானது. கடந்த 13 ஆண்டுகளாக செய்யத் தவறியதை அவர்கள் இம்முறை செய்கின்றார்கள். அரசியல் கட்சிகளுக்கு கசந்தவிடயத்தை துணிவாக மாணவர்கள் கையிலெடுத்துள்ளார்கள். நிச்சயம் இது பாராட்டப்படவேண்டும். இன்னமும் செதுக்கி சரியான திசையில் நகர்த்தப்படவும்வேண்டும். இது தொடரவேண்டும்.

'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கல் செயற்றிட்டத்தை அரசியல் கட்சிகளைப்போன்று வெறுமனே யாழ்ப்பாணத்துடனோ அல்லது வடக்கு மாகாணத்துடனோ முடக்காமல் தாயகத்தின் எல்லையான அம்பாறைவரை எடுத்துச் செல்லத் திட்டமிட்ட மாணவர்களுக்கு முதலில் வாழ்த்துக்கள். எங்கள் எல்லைகள் பறிபோகின்றன என்று கூச்சலிடுகின்றோம். ஆனால், எல்லைகளை நோக்கிச் செல்லவில்லை. அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக்கப் போராட்டத்தின்போது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் போதியளவு மக்கள் ஒத்துழைக்கவில்லை. இதனூடாக தாயகத்தின் எல்லை மாவட்டம் எங்களிடமிருந்து தூரச் செல்வதை உணர்ந்திருக்க முடியும். அதைத்தடுக்கும் பொருட்டு அவர்களையும் இதற்குள் உள்வாங்கியது மிகச்சிறப்பானது.

இதற்கும் மேலாக 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கலுக்காக ஒவ்வொரு பிரதேசத்துக்கும் செல்லும் பல்கலைக்கழக மாணவர்கள் அங்குள்ள பொதுமக்கள், வர்த்தகர்களிடம் 'ஒருபிடி அரிசி' சேகரித்து அதன் ஊடாகவே இந்தக் கஞ்சி காய்ச்சும் நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர். மாணவர்கள் வீடுகளின் கதவுகளைத்தட்டும்போது பணத்தைக் கொடுப்பதற்கு முயன்றாலும் அதைமறுத்து ஒருபிடி அரிசியே தேவை எனச் சொல்லி அதனைப் பெற்று சந்திகள், சந்தைகள், பாடசாலைகள் என்று மக்கள் கூடும் இடங்களில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கின்றனர். கஞ்சி காய்ச்சுவதற்கான விறகுகள் கூட அந்தப் பகுதி மக்கள் மனமுவந்து மாணவர்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கின்றனர். மக்களையும் பங்களிக்கவைத்து அவர்களுடன் சேர்ந்து மாணவர்கள் முன்னெடுக்கும் இந்தச் செயற்பாடு மெச்சத்தக்கது. மக்கள் பங்களிப்புடனான இத்தகைய செயற்பாடுகள்தான் தற்போதைய மிகச்சிறப்பான 'போராட்டவடிவம்'.

அரசியல் தரப்புக்கள் தங்களை முன்னிலைப்படுத்துவதும், வாக்கு அரசியலுக்குள்ளும் கட்சி அரசியலுக்குள்ளும் தமிழ்த் தேசத்தின் விடுதலையை – போராட்டத்தை – அரசியலை முடக்கி, மக்களை புறமொதுக்கியதன் விளைவுகளை அண்மைய நாள்களில் கண்டிருக்கின்றோம். அரசியல் தரப்புக்களால் தமிழ்த் தேசத்தின் நன்மைக்காக முன்னெடுக்கப்படும் போராட்டங்களில்கூட அந்தக் கட்சியின் தொண்டர்களைத்தாண்டி மக்கள் பங்கேற்பு மிக அரிதாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் அதனை மாற்றியமைக்க துணிந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போற்றப்படவேண்டியவர்கள். மாணவர்களின் இந்த நடவடிக்கை நிச்சயமாக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு இனிப்பான செய்தியாக இருக்கப்போவதில்லை. அவர்களின் எதிர்ப்புக்களைத்தாண்டி, மக்களை மையப்படுத்திய இந்தச் செயற்றிட்டத்தை மாணவர்கள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

'முள்ளிவாய்க்கால் கஞ்சி' செயற்றிட்டத்துக்கு மக்களை பங்களிக்கச் செய்ததைப்போன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இறுதி நாள் நிகழ்வையும் மக்கள் பங்களிப்புடனேயே முன்னெடுக்கவேண்டும். நிகழ்வின் ஏற்பாடுகள் ஒவ்வொன்றிலும் மக்களை உள்ளீர்க்க வேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தின் சிரமதானமாக இருக்கலாம், கொடிக்கம்பங்கள் நடுவதாக இருக்கலாம் எல்லாவற்றையும் இயலுமானவரை மக்களின் பங்களிப்புடன் செய்யவேண்டும்.

அடுத்த சந்ததிக்கு கடந்த தசாப்தத்தின் வலிசுமந்த வாழ்வைக் கடத்துவதற்கு துண்டறிக்கை அச்சடித்து விநியோகிப்பதுபோன்று, நினைவேந்தலை ஒவ்வொரு தமிழனும் தன்னுடையது என்று உணர்ந்து கொள்வதற்காக மக்கள் பங்கேற்புக்கு மாணவர்கள் முன் மாதிரியாகிவிட வேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது"

– ஜேம்ஸ் ஆலன்




# இலங்கைக்குத் திரும்பிவந்து இயல்பு வாழ்வைத் தொடங்குங்கள்

## தமிழகத்தில் தஞ்சமடைந்தோரிடம் அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை



**கொழும்பு, மே 11**

**இலங்கையில் இடம்பெற்ற போரின்போது, இங்கிருந்து இடம்பெயர்ந்து தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கு அகதிகளாக வாழ்வோர் மீண்டும் இலங்கைக்கு வந்து இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் இலங்கையில் இருந்து சென்றவர்கள் இரு பிரிவினராக உள்ளனர். புனர்வாழ்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல்களின்படி தமிழ்நாட்டில் 106 அகதி முகாம்கள் செயற்பட்டு வருகின்றன. அங்கு 19 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 435 பேர் வசித்து வருகின்றனர்.

அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் சுமார் 10 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரம் பேர் தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமைப் பதிவு செய்துள்ளனர். படகுகள் மற்றும் விமானங்கள் மூலம் தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ள இலங்கைத் தமிழர்களில் ஒரு பிரிவினர் தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே அகதி முகாம்களுக்கு வெளியில் வசிக்கின்றார்கள். அகதி முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் மொத்தமாக 92 ஆயிரத்து 435 பேர் வசிக்கின்றனர். முகாம்களில் தங்கியுள்ளவர்கள் இலங்கைக்கு தாம் திரும்புவதற்கு விரும்பினால் முகாம் பொறுப்பாளரிடம் அதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவேண்டும். நாடு திரும்பும் அனைவரையும் நாங்கள் வரவேற்கின்றோம். அவர்களுக்கு எத்தகைய ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டுமோ அதனை அரசாங்கம் மேற்கொள்ளும் - என்றார். (ம-இ)

# வழமைக்குத் திரும்பின கண் சத்திரசிகிச்சைகள்

கொழும்பு, மே 11

அரச மருத்துவமனைகளில் தற்போது கண் சத்திரசிகிச்சைகள் வழமைபோன்று மேற்கொள்ளப்படுகின்றன என கண் மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சையின்போது பயன்படுத்தப்பட்ட மருந்தொன்றில் காணப்பட்ட கிருமி காரணமாக, சத்திரசிகிச்சை மேற்கொண்ட சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர். புத்தாண்டுக்கு முன் ஏனைய பல மருத்துவமனைகளிலும் இந்தப் பாதிப்பு கண்டயறிப்பட்டது.

இதுதொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் தலையீட்டில், இந்த வகையான அவசர நிலை முறையாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்த மருந்து பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கண் சத்திரசிகிச்சைகள் வழமைபோன்று மேற்கொள்ளப்படுகின்றன. நோயாளர்கள் அச்சமடையத் தேவையில்லை என்று விசேட மருத்துவ நிபுணர் சங்கத்தின் தலைவர் விசேட கண் மருத்துவ நிபுணர் கபில் பந்து திலக தெரிவித்தார். (ச-இ)

**நாளை** 12.05.2023 வெள்ளிக்கிழமை சித்திரை 29

சுபநேரம் : 05.54 - 07.24
ராகுகாலம் : 10.24 - 11.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேனீ வளர்ப்புக்கான பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், மே 11

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விதாதாவள நிலையமும் விவசாயப் பிரிவும் இணைந்து நடத்தும் தேனீ வளர்ப்புக்கான பயிற்சிப்பட்டறை, எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

மருத்துவக் குணமுடைய வீட்டுக்குத் தேவையான தேன் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும் மற்றும் சுய தொழில் முயலுநர்களை உருவாக்கும் நோக்கிலும் பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

மேலும் தேனீ வளர்ப்பானது வீட்டிலுள்ள மரம், செடி கொடிகளில் அதிக காய்கனிகளையும் தோற்றுவிக்க உதவும் செயன்முறையாகவும் அமையும்.

எனவே, தேனீ வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களும், இந்தத் துறையில் சுய தொழிலை உருவாக்க விரும்புபவர்களும் 021 226 4958 என்ற தொலைபேசியினூடாக எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேசசெயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-14)

## அத்துகோரள எம்.பி.க்கு நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, மே 11

கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்ட பொதுஜன பெரமுனவின் பொலநறுவை மாவட்டத்தின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சாவின் கோரிக்கைக்கமைய மன்றில் அஞ்சலி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2022 மே 9 ஆம் திகதியன்று அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களால் அமரகீர்த்தி அத்துகோரல நிட்டம்புவ பகுதியில் கொல்லப்பட்டார். (ச-இ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 01 . 1956 — மறைவு 09 . 05 . 2023

### திருமதி திருஞானம் விசயலட்சுமி (மல்லிகா)

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருஞானம் விசயலட்சுமி நேற்றுமுன்தினம் (09.05.2023) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் - தங்கலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் பழயலிங்கம், தவமலர், கிருபாதேவி, கலாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணரத்தினம், சிவராசா, பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற திருவளர்செல்வி ஆகியோரின் மைத்துனியும், மாலினி, பாரதி, தர்மிளா, சாயிசங்கர், சாயி சங்கவி ஆகியோரின் பெரியதாயாரும், சர்மிந், அட்சரா, கல்கிசனன், ஆராதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு,
வேலணை.

(CS/50373)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 27 . 04 . 1932 — மறைவு 22 . 04 . 2022

### திருமதி தங்கம்மா அமிர்தலிங்கம்

அன்புள்ள அம்மா!

உங்களை நினைக்கும் போது வரும்
கண்ணீரை நாங்கள் துடைத்தாலும்
எங்கள் இதயத்தின் வலி நிரந்தமானது

காலம் ஒன்று கடந்தாலும் கண்மணிகள்
நாம் கலங்கி நிற்கிறோம் அம்மா
வாராயோ ஒருமுறை வரம்
ஏதும் தாராயோ அம்மா........

உங்கள் வழி நடத்தல் இன்றி
உங்கள் குரல் கேட்காது
ஒவ்வொரு நொடிப் பொழுதும்
நாங்கள் ஏங்குகின்றோம் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த (12.04.2023) புதன்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் மார்க்கண்டு குமாரசுவாமி

(ஓய்வுநிலை பிரதம மருந்தாளர் - யாழ். போதனா வைத்தியசாலை)



மண்ணில் 01.03.1944 — விண்ணில் 12.04.2023

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.05.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
077 760 9929
புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

(CS/50375)AH-1

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி அருணாசலம்

தோற்றம்: 10.02.1939 — மறைவு: 10.05.2023

யாழ்ப்பாணம் கொங்கமை கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், டச்சு வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருணாசலம் அவர்கள் நேற்று (10.05.2023) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான நவரத்தினம் அன்னலட்சுமி தம்பதியரின் ஆசை மருமகனும், மங்கையற்கரசியின் ஆருயிர் கணவரும், அமரர்கள்ன கோடீஸ்வரி, புவனேஸ்வரி, பராசக்தி, தம்பிராசா, சுந்தரலிங்கம், கமலாம்பிகை, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர்களான தளையசிங்கம், குணசிங்கம், ஜெயராஜசிங்கம் மற்றும் சிவபாக்கியம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், நளினி, மாலினி, விமலன், சுபாஜினி, அகிலன், ராகினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தயாபரன், கருணா, ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷானி, கோசிகா, கேசாயினி, தர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 248332)A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 04 . 1944 — மறைவு 09 . 05 . 2023

### இளையதம்பி அப்புத்துரை

ஆவரங்காலை பிறப்பிடமாகவும், 32, றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி அப்புத்துரை அவர்கள் கடந்த (09.05.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சடையம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், துரையம்மா அவர்களின் பாசமிகு கணவரும், கல்யாணி (கனடா), மிலாசினி (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினசிங்கம் (ராஜன்-கனடா), றோகேசன் (T.T.R-Super Market - Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மயில்வாகனம், கனகரட்ணம், வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சஜானி (கனடா), தரணிகா, தாரகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.32, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 248331) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினரின் அனுசரணையில் பத்தாவது தடவையாக ஒழுங்கமைக்கப்பட்ட குருதிக்கொடை முகாம் ஏழாலைமேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. (ய-66)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை, பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, ஒலிபரப்புச் சேவைகள் , ஆரியகுளம் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள், சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, விளம்பர ஒலிபரப்பு சேவைகள் 01.06.2023 ம் திகதி முதல் 31.05.2024 ம் திகதி வரையான காலப்பகுதிக்கும் , ஆரிய குளம் படகோட்டல் மற்றும் நீர்விளையாட்டுகள் 20.05.2023 - 19.05.2024 வரையான காலப்பகுதிக்கும் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00 (பெறுமதி சேர் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 11.05..2023 - 18.05.2023 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 11.05.2023 - 19.05.2023 மு.ப 11.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 19.05.2023 மு.ப 11.00 மணிக்கு

விண்ணப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 19.05.2023 ம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

**இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிப விபரம்**

| இல | இறைச்சிக்கடை,பல்பொருள் வாணிபம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கோழியிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 666,825.23 |
| 2 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 124,736.84 |
| 3 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 336,913.04 |
| 4 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 489,735.98 |
| 5 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 549,192.02 |
| 6 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 129,017.79 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 313,500.00 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 495,000.00 |
| 9 | நாவாந்துறை கோழியிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 353,226.52 |
| 10 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 50,967.41 |
| 11 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 510,386.31 |
| 12 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 427,123.07 |
| 13 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 282,813.44 |
| 14 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 15 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 16 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 17 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |

**சந்தை, சிற்றுண்டிச்சாலை, விளம்பர ஒலிபரப்பு சேவைகள், ஆரியகுளம் படகோட்டல் சேவை மற்றும் நீர விளையாட்டுகள் விபரம்**

| இல | விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 6,076,737.91 |
| 2 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | 2,000.00 | 6,910.06 |
| 3. | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 330,550.00 |
| 4 | ஆரியகுளம் படகோட்டல் மற்றும் நீர்விளையாட்டுகள் | 5,000.00 | 165,000.00 |
| 5 | விளம்பர ஒலிபரப்பு சேவை(நவீன சந்தை கட்டிடத்தொகுதி மேல்மாடி) | 30,000.00 | 760,000.00 |
| 6 | விளம்பரஒலிபரப்புசேவை(செங்குந்தா சந்தைத்தொகுதியின் மீன் சந்தைக்கு மேல்) | 10,000.00 | 403,180.60 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 08 . 1945

மறைவு 09 . 05 . 2023

## திருமதி தனலெட்சுமி தபேந்திரன்

யாழ்ப்பாணம், சிவப்பிரகாசம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது சிங்கப்பூரில் வசித்தவருமாகிய திருமதி தனலெட்சுமி தபேந்திரன் நேற்றுமுன்தினம் (09.05.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மரும்களும், தபேந்திரனின் (மலாயன் டிரேடிங் கம்பனி - யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், பவித்திராவின் (சிங்கப்பூர்) அன்புத் தாயாரும், கைலாசனின் (சிங்கப்பூர்) அன்பு மாமியும், பூஜா (சிங்கப்பூர்), அனுஜா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பாட்டியாரும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரேணுகாதேவி தில்லைநாதன் (கனடா), காலஞ்சென்ற பத்மலோஜினி புவனேஸ்வரன், புவனராணி ரத்தினசபாபதி (லண்டன்), காலஞ்சென்றவர்களான இந்திராணி தேவராஜா, விமலராணி சுப்பிரமணியம் மற்றும் சுப்பிரமணியம் தர்மேந்திரன் (லண்டன்), வசந்தராணி ராமனாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனவேந்தன் கமலாதேவியின் (யாழ்ப்பாணம்) அன்பு அக்காவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.05.2023) புதன்கிழமை சிங்கப்பூரில் மாலை 7.15 (சிங்கப்பூர் நேரம்) நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/50364)AH-1

**தகவல்: குடும்பத்தினர்**

**தனவேந்தன் - 077 651 0265, பவித்திரா (மகள்) - +6590066643**

# மரண அறிவித்தல்



பிறப்பு 28 . 04 . 1943

இறப்பு 09 . 05 . 2023

## திருமதி சிவபாக்கியம் வீரவாகு

(யா/ கட்டைவேலி யாக்கருவிநாயகர் வித்தியாலயம்)

கோவிற்கடவை துன்னாலை மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் வீரவாகு கடந்த (09.05.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சோதாத்தை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரவாகுவின் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்) அன்பு துணைவியாரும், நந்தினி (வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), முரளீதரன் (சட்டத்தரணி), யாழினி (ஆசிரியர் - யா/ ஞானசாரியார் கல்லூரி), காலஞ்சென்ற மனோரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானபிரகாஷ் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), அனுசா (வங்கி உத்தியோகத்தர் இலங்கை வங்கி வடமாகாணம்), முரளி (அதிபர் - யா/கரணவாய் பொன்னப்பலம் வித்தியாலயம்), சங்கர் (கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கமலம்மா, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆராதனா, ஆர்த்தி, சஞ்சீவி, சுரேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வக்குமாரி, விமலகுமாரி, சாந்தகுமாரி, சிவகுமார், சந்திரகுமார், நந்தகுமாரி, வசந்தகுமாரி, காலஞ்சென்றவர்களான சுதர்மதி, தனமதி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோவிற்கடவை,**
**துன்னாலை மத்தி, கரவெட்டி.**

(cr39816 (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 773 8172**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை சைவப்புலவர் சங்க அனுசரணையில் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி சிவ குருநாதபீடம் சமாதி கோயிலிலும் மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் அடியார்களுக்கு தீட்சை வழங்கப்பட்டது. (ச)


## பணியாளர்கள் தேவை

உடுவில் மகளிர் கல்லூரியில் பின்வரும் வெற்றிடங்களுக்குப் பணியாளர்கள் தேவைப்படுவதால் 35 - 50 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

1. சமையல் மேற்பார்வையாளர் - க.பொ.த. உயர்தரம் சித்தி
2. சமையல் செய்பவர்

**காலம் :- 26.05.2023 இற்கு முன்னர்**
**நேரம் :- மு.ப 8.00 - பி.ப 2.00 வரை**

- அதிபர் -
உடுவில் மகளிர் கல்லூரி.

(CS/50372) AH-1

## வீடு வாடகைக்கு

அரியாலை, மாம்பழம் சந்திக்கு அண்மையில் தளபாட வசதிகளுடன் பெரிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனம்/ கல்வி கற்பவர்கள்/ தொழில் புரிபவர்கள் குழுவாகத் தங்குவதற்கு மட்டும் வழங்கப்படும். (CS/24828)AH-1

**075 979 9161, 077 769 9212**

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் விறைப்பு மரத்துப்போதல், மூட்டுக்கள் பாதிப்பு, அல்ஸர், ஆஸ்மாவினால் தீவிர நுரையீரல் பாதிப்பு, நீரிழிவு புண்கள், தோல்நோய்கள்.

விஷேட சிகிச்சை **T.P.: 077 321 2740**

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

## வட இலங்கைச் சங்கீத சபை
## மருதனார்மடம் - சுன்னாகம்

### 2023 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள்

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2023 ஆம் ஆண்டு கோரப்பட்ட தரம் 1 தொடக்கம் 6 வரையான தரங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் 2023 ஜூன் மாத இரண்டாம் வாரத்திலிருந்து வரும் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் **அறிமுறைப் பரீட்சைகள்** 29.07.2023, 30.07.2023 (சனி, ஞாயிறு) ஆகிய தினங்களிலும் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள்**

**தரம் : 1 , 2 - ஜூன் மாதம் 11, 12, 17, 18, 24, 25**
**தரம் : 3, 4 - ஜூன் மாதம் 17, 18, 24, 25**
**தரம் : 5 , 6 - ஜூலை மாதம் 01, 02, 08, 09, 15, 16**

**தரம் 5, 6 இற்கான செயலமர்வு ஜூன் மாதம் 23,24,25** ஆகிய தினங்களில் வட இலங்கைச் சங்கீத சபை மண்டபத்தில் நடைபெறும்.

**மு.இராதாகிருஸ்ணன்**
**தலைவர்,**
**வட இலங்கைச் சங்கீத சபை,**
**மருதனார்மடம் - சுன்னாகம்.**

(CR/39815)AH-1

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள் தேர்தல் அபேட்சகர்களுக்கும் வாக்காளர்களுக்குமான அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள் தேர்தல் 25.06.2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரை யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறும்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க நடப்பு வருட அங்கத்தவர்கள் மட்டுமே இத்தேர்தலில் போட்டியிடவும் வாக்களிக்கவும் உரிமையுடையவர் ஆவர்.

நடப்பு வருட அங்கத்தவர் பட்டியல் **பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.**

01.மருதடி விநாயகர் ஆலயம் - மானிப்பாய்
02.பிரதேச சபை (உப அலுவலகம் ) - மானிப்பாய்
03.மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்
04.மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்
05.பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்

தேர்தலில் போட்டியிட விரும்பும் அங்கத்தவர்கள் தேர்தல் வைப்புப்பணமாக ரூபா 1000/= இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் உள்ள சேமிப்பு கணக்கு இல 7292936 இல் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நியமனப்பத்திரத்துடன் இணைக்கவேண்டும். அவ்வாறு செய்யப்படாத நியமனப்பத்திரங்கள் தேர்தல் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**அபேட்சகர் நியமனப்பத்திரங்களை பெறுதல்**

நியமனப்பத்திரங்களைப் பெறும் இடம் : பிரதேசசெயலகம் சண்டிலிப்பாய்
நாள் : 12.05.2023 - 19.05.2023 (அலுவலக நாட்கள்)
நேரம் : 9.30 மணி தொடக்கம் 4.15 மணி வரை

**அபேட்சகர் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தல்**

இடம் : பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய்
நாள் : 24.5.2023
நேரம் : 9.00 மணி - 12.00 மணி
வாபஸ்பெறும் கால எல்லை : 25.05.2023 - 30.05.2023 (அலுவலக நாட்கள்) மு.ப. 9.00 மணி - நண்பகல் 12.00 மணி

தேர்தல் குழு
மருதடி விநாயகர் ஆலயம்

(CR 39812) A-1

# மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

### வாழ்த்துச் செய்தி




**மு. இராதாகிருஸ்ணன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

எனது வலயத்திற்குட்பட்ட யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பகுதித்தலைவராக் கடமையாற்றி ஓய்வுபெறுகின்ற மணிவிழா நாயகி செல்வி கயிலாசபிள்ளை கலாதேவி அவர்கள் தனது பணிக்காலத்தில் நேர்மை, விடாமுயற்சி, தொழிற்பற்று மிக்கவராகவும் காணப்படுகின்றார். இவர் வளர்ந்து வரும் மாறுதல்களை ஏற்றுக்கொண்டு சவால்களை எதிர்கொண்டு கல்விப்பணியிலே தனக்கென ஒரு தனியான இடத்தினைப் பெற்ற மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். நாயகியின் ஓய்வுக்காலம் இனிதே சிறக்க எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுவதோடு தெய்வப்புலவர் வள்ளுவர்

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்"** என்பதையும் நிலை நிறுத்தி நிறைவு செய்துகொள்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**ப.சசிக்குமார்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்
ஆரம்பப் பிரிவு யாழ்.வலயம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவராகக் கடமையாற்றிய செல்வி க. கலாதேவி அவர்கள் 10.05.2023 அன்று சேவையில் இருந்து ஓய்வுபெறுகிறார். அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

இவர் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முன்னின்று செயற்பட்டமை பாராட்டுக்குரியதாகும்.

ஓய்வு என்பது எண்ணியதை அடிப்படையாகக்கொண்ட கட்டாய விதி முறையாக இருந்த போதும் தங்களது ஓய்வுகாலத்தில் கல்விப்பணி சிறக்கவும் பாடசாலைக்கு சேவையை வழங்குவதற்கும் தங்களது ஓய்வுகாலம் சீரும் சிறப்பமாக அமைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன்.





## செல்வி கலாதேவி
## கயிலாசபிள்ளை (B.A B.E.D)

- மனித உரிமை Dip
- ஆலோசனையும் வழிகாட்டல் Dip
- விசேட தேவை Dip
- கல்வி முகாமைத்துவம் Dip

- பட்டப்படிப்பு : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  - 2014 தேசிய பிரதீபா விருது
  - 2017 தேசிய பிரதீபா பிரபா விருது
  - 2018 ஆசிரியர் தாரகை விருது
- ஆரம்பக்கல்வி : தி/ஸ்ரீ.சண்முக இந்து மகளிர் கல்லூரி
  தரம் - 1- GCE (A/L)

**சேவை விபரம்**

- 15.12.1989 – 01.01.1993
  தி/சண்முக இந்து மகளிர் கல்லூரி
- 1993 – 1994 மட்/ அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
- 1995 – 06.07.2008 வரை தி/ சண்முக இந்து மகளிர் கல்லூரி
- 07 .07.2008 – 10.05.2023 வரை யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### அதிபரின் ஆசிச் செய்தி




**திரு. சி.இந்திரக்குமார்**
அதிபர்.
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

"கடன் என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு"

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க தம் கடமைகள் இவையென அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு உலகில் நல்லன அனைத்தும் இயல்பாகவே கடமையாக அமையும். அத்தன்மை அனைத்தும் அமையப்பெற்றவர் தான் மணிவிழா நாயகி செல்வி கைலாசபிள்ளை கலாதேவி அவர்கள். மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களின் பணியே மேலோங்கி நிற்கின்றது. அந்த வகையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக எமது கல்லூரியில் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பணியாற்றி மாணவர்களையும், ஆசிரியர்களையும் வழிநடத்திச் சென்றவர் செல்வி கைலாசபிள்ளை கலாதேவியவர்கள். சிறந்த ஆற்றலும் நற்பண்பும் மிக்க அவர் மாணவர்களை அன்போடும் அக்கறையோடும் கற்பித்து அவர்கள் உயர்நிலை அடைவதைக் கண்டு அகம் மகிழ்ந்தவர். தனது நீண்டகாலக் கல்விப் பணியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளைப் பேணி அன்பு கலந்த கண்டிப்புடன் வழிநடத்திச் சென்றவர் பாடசாலை நேரத்தில் மட்டுமன்றி ஏனைய நேரங்களிலும் விடுமுறை காலங்களிலும் பாடசாலயின் கல்வி உயர்ச்சிக்காக மிகுந்த அக்கறையுடன் பணியாற்றியவர். இத்தகைய அர்ப்பணிப்பும் உயர்வும் கொண்ட ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்கவும் அவர் நீடூழி வாழவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி அவர் பணியை வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

"நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்
பண்பு பாராட்டும் உலகு"

### வாழ்த்துச் செய்தி



**ஆ. நவநீதகிருஸ்ணன்**
**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் நீண்டகாலமாகக் கல்விப் பணி புரிந்து இன்றைய தினம் மணிவிழாக் காணும் செல்வி க. கலாதேவி அவர்களை வாழ்த்துவதில் இறும்பூதடைகின்றேன். மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டி அவர்களை ஈர்க்கும் வசீகரம் கொண்டவர். எல்லோரையும் அரவணைக்கும் தன்மை மாறாத புன்னகை நாயகியின் அணிக லன்கள் ஆகும்.

எண்ணி துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவதும் என்பது இழுக்கு

என்ற குறட்பாவிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர் மணிவிழா நாயகியின் ஓய்வுக்காலம் ஒளிமயமானதாக அமைய வேண்டும் எல்லா சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 அரசியல்வாதிகளின் சொத்துக்களே இலக்கு!

### மே 9 கலவரம் தொடர்பில் விஜயதாஸ தகவல்

மே9 திகதிய கலவரங்களை அடுத்து, மே 10ஆம் திகதி சுமார் 100 அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்படவும், சொத்துக்கள் அழிக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது - என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மே9 சம்பவத்தின் பின்னர் அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்களை அழிக்க ஒரு தரப்பினர் தீர்மானித்திருந்தனர். அரசியல்வாதிகளின் பெயர்ப் பட்டியலையும் தயாரித்திருந்தனர் எனத் தகவல் கிடைத்தது.

இது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு தெரியப்படுத்த பல தடவைகள் முயற்சித்தேன். எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை. மே 10ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள் உட்பட ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் உள்ளடங்கலாக 100 அரசியல்வாதிகளின் சொத்துக்கள் மற்றும் வீடுகளை தீக்கிரையாக்க ஒருதரப்பினர் தீர்மானித்திருந்தனர். இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பேச்சில் ஈடுபட்டேன். இதனையடுத்து நாட்டின் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளும் அதிகாரம் அப்போது இராணுவத்துக்கு வழங்கப்பட்டது.

கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையாகச் செயற்பட அனுமதி வழங்கப்பட்டது. இராணுவத்தை களமிறக்கி, அவர்களுக்கு துப்பாக்கிப் பிரயோகத்துக்கு அனுமதி வழங்காமல் இருந்திருந்தால் மே 10ஆம் திகதி நாடு முழுவதும் தீப்பற்றியிருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளின் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டிருக்கும்' - என்றார். (அ-ம-44)




## புதுச்சேரியில் 'ஆனந்த தாண்டவம்' மட்டு. மாணவிகள் கின்னஸ் சாதனை

மட்டக்களப்பு, மே 11

தென்னிந்தியாவின் புதுச்சேரி நகரில் நடைபெற்ற 'ஆனந்த தாண்டவம்'நடன நிகழ்வில், மட்டக்களப்பு நித்திய கலாலயா நாட்டிய பள்ளியின் மாணவர்கள் கின்னஸ் சாதனையில் இடம்பிடித்துள்ளனர்.

புதுவை மாநில சுற்றுலா மற்றும் கலை பண்பாட்டுத்துறை, இந்திரா காந்தி தேசிய கலை மையம் ஆகியவை இணைந்து நடத்திய "ஆனந்த தாண்டவம்" எனும் நிகழ்வு, தென்னிந்தியாவின் புதுச்சேரி நகரில் கடற்கரை காந்தித் திடலில் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. உலகின் பல நாடுகளிலும் இருந்து 2 ஆயிரத்து 600 க்கும் மேற்பட்ட பரதநாட்டிய கலைஞர்கள் கையில் உடுக்கை அடித்துக் கொண்டு "ஆனந்த தாண்டவம்" என்ற தலைப்பில் 9 நிமிடங்கள் தொடர்ந்து நடனமாடி உலக சாதனையில் இடம்பிடித்தனர்.

இதில் கிழக்கு மாகாணத்தின், மட்டக்களப்பைச் சேர்ந்த கலாவித்தகர் ஸ்ரீமதி வசந்தி நேருவின் நித்திய கலாலய நாட்டிய பள்ளியின் மாணவர்கள் 15 பேர் பங்கேற்று உலக சாதனையில் இடம்பிடித்துள்ளனர். நிகழ்வில் நித்திய கலாலய நாட்டிய பள்ளியின் இயக்குநர் கலாவித்தகர் ஸ்ரீமதி வசந்தி நேருவுக்கு, புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி விருது வழங்கிக் கௌரவித்தார். நித்திய கலாலய மாணவிகள் இத்துடன் மூன்றாவது முறையாக கின்னஸ் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14-60)

# டொலர் பெறுமதி வீழ்ச்சி சீனி விலை அதிகரிப்பு!

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் உத்தரவு

**கொழும்பு, மே 11**

**டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் சீனியின் விலையை அதிகரிக்கச் சாத்தியமில்லை. ஆயினும் சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. விலையுயர்த்தப்பட்டமை தொடர்பில் அறிக்கை வழங்குமாறு வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்துக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உத்தரவிட்டார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி சுமார் 13 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆயினும் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரி காரணமாக கோதுமைமாவின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோன்று டொலரின் பெறுமதி வீழ்ச்சியுற்ற நிலையில் சீனியின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தையில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பாக வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# 41 இலங்கையர்களை நாடு கடத்தியது ஆஸி.

கொழும்பு, மே 11

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்டபோது, அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டிருந்த 41 இலங்கையர்கள், அந்த நாட்டிலிருந்து நேற்றுமுன்தினம் நாடு கடத்தப்பட்டனர்.

அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான சிறப்பு விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனைப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், இவர்கள் பல நாள் மீன்பிடிப் படகுகள் மூலம் கடல் கடந்து ஆஸ்திரேலியா சென்றவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## இறக்குமதி ரின்மீன் வரி அதிகரிப்பு

ஒரு கிலோ கிராம் ரின் மீன் இறக்குமதிக்கான வரி 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு 355 லட்சத்து 41ஆயிரத்து 104 கிலோ கிராம் ரின்மீன் இறக்குமதி செய்யப்பட்டது. அதற்காக 2 ஆயிரத்து 768 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவு செய்தது.

அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்டுவதுடன் உள்ளூர் மீன்களை கொள்வனவு செய்வதற்கான உந்துதலை மக்களுக்கு அளிப்பதுமே வரி அதிகரிப்பின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 20.05.1939 | 10.05.2023 |



## நாகலிங்கம் சுப்பிரமணியம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் திரு. நாகலிங்கம் சுப்பிரமணியம் நேற்று (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கமுத்து ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சுந்தரம் (ஆசிரியர்) செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சௌந்தரலீலாவதியின் அன்புக் கணவரும், ஸ்ரீசங்கர், கீதா, பிறிந்தா, அஜந்தா, உதயசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாசினி, பகீரதன், சண்முகரத்தினம், யோகதாஸ், யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிப்பிரசாத், ஆரண்யா, துவாரகன், ஆரதி, சங்கீர்த்தனன், விதூஷன், அக்ஷயா, காருஜன், அபிஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பழைய கோட்டை கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (11.05.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அஜந்தா-0773686211**(HNB)
**உதயசங்கர்-0773652455**(HNB)
**யோகதாஸ்-0777880726**(HNB)

**தகவல் : குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 15ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



பிறப்பு
10 . 08 . 1949

இறப்பு
27 . 04 . 2023

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும்
நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

**திரு. நாகலிங்கம் செல்வநாதன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம் (கச்சேரி), யாழ்ப்பாணம்)**


எமது தந்தையாரின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கெடுத்து நேரிலும், தொலைபேசியிலும், சமூக வலைத்தளங்களிலும் ஆறுதலும் தேறுதலும் கூறிய நண்பர்கள் , உறவினர்கள், சுற்றத்தவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி:- திருமதி கோமதிதேவி செல்வநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ யாழ் மத்திய கல்லூரி)

பிள்ளைகள்:- செல்வி ஜயந்திமதி செல்வநாதன்
(ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)
செல்வி ஜனனி செல்வநாதன்
(அதிபர், கிளி/முரசுமோட்டை அ.த.க.பாடசாலை)
திரு. செல்வநாதன் பிரணவன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

**0777578710**

## மரண அறிவித்தல்



பிறப்பு
04 . 07 . 1947

இறப்பு
10 . 05 . 2023

### சின்னப்பு இராசேந்திரம் (மணியம்)

புதுமடம் கர்த்தர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு யுவசக்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இராசேந்திரம் (மணியம்) நேற்று (10.05.2023) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை யேமிஸ், அந்தோனிப்பிள்ளை, தேவராசா (காந்தி), லில்லிமலர் மற்றும் சூசைப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், இராசலட்சுமி, அருச்சுனன், இந்திரன் ஆகியோரின் மைத்துனரும், தர்மசீலன் (பெரியவன்), சல்போன்ஸ் (கண்ணன்), பிரகாஸ் (கமல்), பிரதாஸ் (அமைதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜனி, சம்துஜா, பகிர்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்சரா, சபிஷ்ணு, நைநிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (11.05.2023) வியாழக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் புதுமடம் கர்த்தர் ஆலயத்தில் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு மல்வம் கத்தோலிக்க சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 291 5793**

தகவல்: குடும்பத்தினர்.

## தாக்குதலில் ஒருவர் கொலை

தெஹிவளைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் தெஹிவளைப் பகுதியில் உள்ள குளிரூட்டி திருத்தும் நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

குளிரூட்டி திருத்தும் நிலையத்துக்குள் பல டும் இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது, 27 வயதான இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹிவளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஓ-14-22)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் அல்பிறட்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் அல்பிறட் அவர்கள் நேற்று (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் நீற்றம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற ஞானமலரின் அன்புக் கணவரும், றியோபிலாவின் (சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில மொழி கற்பித்தல் துறை யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும், லக்சனின் (சட்டத்தரணி) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (11.05.2023) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு உடுவில் புனித செபமாலை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்புக்கு - 077 8575 216**

(CS 24833)A-1

## மரண அறிவித்தல்

### சுந்தரம் இராசலிங்கம் (தயா)



தோற்றம் 28.06.1955 மறைவு 10.05.2023


M.S. லேன், கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் இராசலிங்கம் நேற்று(10.05.2023) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 952 7350**
**077 626 2958**

## மரண அறிவித்தல்

### இராசையா வெள்ளியம்பலம்



தோற்றம் 23.03.1945 மறைவு 10.05.2023

சங்கரத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வெள்ளியம்பலம் நேற்று (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா பசுபதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதிமணியின் அன்புக் கணவரும், மஞ்சுளா, மகிந்தன், நந்தினி, யாழினி, சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுமார், டர்சினி, மனோகரன், லவணன், லக்ஷ்மன் ஆகியோரின் அன்பு மாமனும், சந்துஜன், ஜசித்திரா, யோகிதா, பிரணாளினி, சதுர்ஷணன், மாதுரி, கவிப்பிரியா, ரக்ஷிதா, சஞ்ஜித், ஜதுஷ், பிரியங்கி, கவிவர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சோமசுந்தரம், கார்த்திகேசு, கனகலிங்கம், தியாகராஜா, நல்லம்மா, கனகம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, வழக்கையாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

**தகவல்:**
**மகன் - மகிந்தன் - 077 617 6642**
**மகள் - சிவாஜினி - 077 8155 177**

(CR 39819)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி பதவி...

கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் போராட்டம் காரணமாக பஸில் ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச ஆகியோரும் இறுதியில் கோத்தாபய ராஜபக்சவும் பதவிகளில் இருந்து விலக நேரிட்டது. அதன் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடக்கி வாசிக்க வேண்டிய நிலைமையிலேயே உள்ளனர்.

ராஜபக்சக்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதற்கு முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவின் செயற்பாடுகளே காரணம் என்று பல்வேறு தரப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலரும்கூட அதை ஆமோதித்து வருகின்றனர். கடந்த முதலாம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பஸில் ராஜபக்சவுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமைக்கு கட்சிக்குள் எதிர்ப்புக்கள் கிளம்பியிருந்தன.

இந்தநிலையில் ஜனாதிபதி ரணிலுக்கும், பஸில் ராஜபக்சவுக்கும் இடையே மூடிய அறைக்குள் கலந்துரையாடல் நடந்துள்ளது என்ற தகவல் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவுக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரணிலுக்கும், பஸிலுக்கும் இடையே நடந்த சந்திப்பில் பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன. பிரதானமாக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவே அதிகம் பேசப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பஸில் ராஜபக்ச பல யோசனைகளை இந்தச் சந்திப்பில் முன்வைத்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க ரணிலுக்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவு வழங்கப்படும் என்றும் பிரதமர் பதவியை தனக்கு வழங்கவேண்டும் என்றும் பஸில் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலையே மொட்டுக் கட்சியின் வேட்பாளராக நிறுத்துதல், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குதல் போன்ற பல ஆலோசனைகளை ரணிலிடம் பஸில் முன்வைத்தார் எனவும் தெரிய வருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன தரப்புக்குள் பல்வேறு கருத்துக்கள் உள்ள நிலையில், பஸிலின் இந்தச் சந்திப்பு முக்கியம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. பஸில் ராஜபக்சவின் இந்த நகர்வுகள் மஹிந்த தரப்பினரை ஓரங்கட்டும் நகர்வுகள் என்று பொதுஜன பெரமுனவுக்குள் சலசலப்பு எழுந்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுடன் கைகோர்த்து முக்கியமான பதவிகளைப் பெறும் நோக்குடனே பஸில் காய் நகர்த்த ஆரம்பித்துள்ளார் என்று பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பு குற்றஞ்சாட்டுகின்றது. (அ-எ-22)

## கிளிநொச்சியில்...

முன்பாக ஏ-9 வீதியில் பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடுகள் தமிழர் தாயகப் பகுதிகளில் முன்னெடுக்கப்படுகின்றன. முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிப்பதற்கான பொருள்கள் பொதுமக்களிடம் பெறப்பட்டு கஞ்சி தயாரிக்கப்பட்டுப் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்குவதன் ஊடாக எமது இனத்தின் வரலாற்றையும், வலிகளையும் இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் நோக்கில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு இறுதிப்போர் நடந்த காலப்பகுதியில் பொதுமக்களுக்கான உணவுப் பொருள்கள் தடுக்கப்பட்டிருந்தன. போர் இடம்பெற்ற பகுதிகளில் இருந்த மக்கள் பெரும் உணவு நெருக்கடியை எதிர்கொண்டிருந்தனர். அப்போது கிடைத்த சிறிதளவு அரிசியை மட்டும் கொண்டு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட கஞ்சியே அவர்களின் உயிர்களைத் தக்கவைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-113)

## காணிகளைப்...

அவற்றை மேற்கொள்ளவேண்டும் என்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் கோரியுள்ளது.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் தங்களுக்குரிய சொத்துக்கள் மற்றும் உடைமைகளைத் திருட்டுக் கும்பல்களிடம் இருந்து மீட்பதற்கு பொதுமக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து உதவவேண்டும் என்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

30 ஆண்டுகளாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள வலி. வடக்கின் சில பிரதேசங்கள் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. அவை விடுவிக்கப்பட்டவுடன் ஊடகங்கள் மூலமும், கிராம மட்ட அலுவலர்கள் ஊடாகவும் இது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு, காணிகளின் உரிமையாளர்கள் தங்கள் காணிகளை அடையாளப்படுத்தி சொத்துக்களையும், உடைமைகளையும் பாதுகாக்கவேண்டும் என்று கோரியிருந்தோம்.

எமது கோரிக்கைக்கு அமைய பல பொதுமக்கள் தங்கள் காணிகளையும், சொத்துக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். ஆயினும் இன்னமும் சிலர் தங்கள் காணிகளை அடையாளப்படுத்துவதிலும், சொத்துக்களைப் பாதுகாப்பதிலும் அசமந்தமாக உள்ளனர். இதைப் பயன்படுத்தி நாடு முழுவதிலும் இருந்து வரும் திருட்டுக் கும்பல்கள் பெறுமதியான சொத்துக்களைத் திருடிச் செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மிகப் பரந்தளவான பிரதேசத்தில் 24 மணிநேரமும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவது இயலாத காரியம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கிராம மட்ட அலுவலர்களும், பொலிஸாரும் பொதுமக்களின் உடைமைகளைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தாலும் 24 மணிநேரமும் பாதுகாப்பு வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்ற விடயம்.

காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளை அடையாளப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். காணி உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து இருப்பின், அவர்கள் தங்கள் நம்பிக்கைக்குரிய உறவினர்கள் அல்லது நண்பர்கள் உதவியுடன் காணிகளை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். விடுவிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்தக்காணிகளில் குடியமர இயலுமானவரை முயற்சியுங்கள். அது உடனடியாகச் சாத்தியமற்றது என்றால் காணிகளைத் துப்புரவாக்கி அவற்றை அடையாளப்படுத்துங்கள். இந்த விடயத்தில் ஏதேனும் உதவிகள் தேவைப்படுமிடத்து பிரதேச செயலகம் அந்த உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது என்று பிரதேச செயலக நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-66)

## புதிய...

ஐவரின் பெயர்கள் இதுவரை முன்மொழியப்பட்டுள்ளன. அவர்களுள் நால்வர் அரசியல்வாதிகள், ஒருவர் அதிகாரி என்றும் தெரியவருகின்றது.

நான்கு அரசியல்வாதிகளுள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, நவீன் திஸநாயக்க, தயா கமகே ஆகியோரின் பெயர்கள் அடங்குகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனிலிருந்து நாடு திரும்பியதும் புதிய ஆளுநர்களின் நியமனம் இடம்பெறும் என்று கடந்த வாரம் அரச தகவல்கள் தெரிவித்திருந்தன. ஜனாதிபதி இவ்வாரம் திங்கட்கிழமை நாடு திரும்பினார். எனினும், புதிய ஆளுநர்கள் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-22)

## ஜனாதிபதி...

தும் மாணவர்களுக்காக மின் வெட்டை நிறுத்தவேண்டும் என்று அவர் மக்கள் பக்கம் நின்று செயற்பட்டிருந்தார். அதற்காக அவருக்கு எதிராக அரசாங்கத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், அவர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-எ-22)

## வீதியில்...

பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப் பகுதியில் நடந்துள்ளது.

உடையார்கட்டு நகர் பகுதியில் உள்ள தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரத்தில் பணத்தை எடுத்துக்கொண்டு வீதியில் நடந்த சென்றபோதே மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பெண்ணின் கையிருந்த பையைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று அந்தப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-எ-19)

## கால...

இந்த வழக்கைத் தொடர்வதா? என்பதைத் தீர்மானிப்பதற்கு இரு வாரங்கள் தமது திணைக்களத்துக்கு கால அவகாசம் தேவை என சட்டமா திணைக்களத்தின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டவாதி நிஷாந் நாகரட்ணம் கோரியநிலையில், நீதிமன்றம் இரு வாரம்கால அவகாசம்வழங்கி, வழக்கை ஒத்திவைத்தது.

தமிழ் மக்களின் புராதன வழிபாட்டுத் தலமான வவுனியா, நெடுங்கேணியில் உள்ள வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதி தொல்பொருள் திணைக்களத்தால் உரிமைகோரப்பட்டுள்ளது. அதையடுத்து அந்தப் பகுதிக்கு வழிபாட்டுக்குச் செல்வதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து, இந்த விடயம் நீதிமன்றத்துக்குச் சென்றது. பின்னர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வதற்குத் தடை ஏற்படுத்தக்கூடாது என்றும், அங்கு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், மலையில் ஏறுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த ஏணி சேதமடைந்திருந்த நிலையில், புதிய ஏணியைப் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. புதிய ஏணி பொருத்தப்பட்ட நிலையில், அதை உடனடியாக அகற்றவேண்டும் என்று பொலிஸார் பணித்திருந்தனர்.

புதிய ஏணி பொருத்தப்பட்டமை தொடர்பாக மூவர் மீது பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் மன்றில் முன்னிலையான அரச சட்டவாதி நிஷாந் நாகரட்ணம் இந்தவழக்கைத் தொடர்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இரு வாரம் கால அவகாசம் வழங்கவேண்டும் என்று தெரிவித்தார். அதையடுத்து நீதிமன்றம் கால அவகாசம் வழங்கி வழக்கை ஒத்திவைத்தது. (அ-எ-26)

## இலங்கை...

வரவுள்ளது. இந்தக் குழு எதிர்வரும் 23ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசனும் அடங்குகின்றார்.

இந்த வருடத்தின் பிற்பகுதியில் முதல் மறு ஆய்வுப் பணிகளுக்கு முன்னதாக இலங்கையுடனான வழக்கமான ஆலோசனைகளின் ஒருபகுதியாக இந்தக் குழுவின் பயணம் அமைந்துள்ளது. (அ-எ-இ)

## ஆதிலிங்கேஸ்வரருக்கு...

நேற்று 108 கும்ப சங்காபிஷேகம் நடைபெற்றது. வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து வந்த பக்தர்கள் சங்காபிஷேகத்தில் கலந்துகொண்டனர். (அ-எ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி – தருமபுரத்தில் சிறுகைத்தொழில் நிலையம்

கிளிநொச்சி, மே 11

கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட உழவனூர் தருமபுரம் பகுதியில் சிறுகைத்தொழில் நிலையமும் மாதிரிப் பண்ணையும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கற்பக விநாயகர் ஆலயம் வோல்தம்ஸ்ரோ லண்டன் நிறுவன இயக்குநர் மு.கோபாலகிருஸ்ணனின் நிதியுதவியில் வாழ்வாதார தொழில் வாய்ப்பின்றி இருந்த தெரிவுசெய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அப்பளம், அரிசிமா, மிக்சர், கச்சான், கடலை, ஊட்டச்சத்து மா வகைகள் உள்ளிட்ட உற்பத்திகளை மேற்கொள்ளும் வகையிலும், மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு என்பனவற்றை ஊக்குவிக்கும் விதமாகவும் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம -14.113)

### சிறுமி உயிரிழப்பு; சந்தேகநபர் கைது

களுத்துறையில் மர்மமான முறையில் உயிரிழந்த பாடசாலை மாணவியின் மரணம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை காலி வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்குப் பின்னாலுள்ள ரயில் தண்டவாளமருகே சிறுமியின் சடலம் ஆடைகளற்ற நிலையில் மீட்கப்பட்டது.

சந்தேகநபர் காலி பிரதேசத்தில் தலைமறைவாகியுள்ளார் எனக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான அதிகாரிகள் குழு, ஹிக்கடுவ பிரதேசத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்டு சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளது. களுத்துறை, இசுரு உயன பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார். (ச-இ)

## சுற்றுச்சூழல் கருத்தரங்கு

கிளிநொச்சி, மே 11

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மனிதாபிமான அபிவிருத்தித் திட்டங்கள் அமைப்பினின் ஏற்பாட்டில் "சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு" பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

செயலமர்வில் வளவாளர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் ரஜி மற்றும் கண்டல் தாவரம் பற்றிய ஆராய்ச்சியாளர் எடிசன் ஆகியோர் பங்குபற்றினர். செயலமர்வில் கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-14.9)


**வாடகைக்கு**

கல்வியங்காடு, 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதியோரமாக கடை வாடகைக்குண்டு.

**077 175 0746** (CS 50320) AH-1

**விசேட விலைக்கழிவு**

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட விநியோக உரிமை முகவராகிய சிவா நறுமணப் பூங்காவில், ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருள்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள், வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**021 222 2567**

சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

**ஆண் வேலையாள் தேவை**

கிளிநொச்சியிலுள்ள செல்வாநகரில் மாட்டுப்பண்ணை ஒன்றுக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள் தேவை. மாதம் சம்பளமாக 30,000 கொடுக்கப்படும். (தங்குமிட வசதி. மூன்று வேளை உணவு தரப்படும்.)

வயதெல்லை- 18-50.

**தொடர்பு:077 5381 642**

**வேலைவாய்ப்பு (பெண்)**

எமது நிறுவனத்தில் பொருட்கள் பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாளொன்றுக்கு 850ரூபா சம்பளமும், மதிய உணவும் வழங்கப்படும். சுயவிபரக்கோவையுடன் கிழமை நாள்களில் நேரில் வரவும். *(9am - 4pm)*

சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

**பணியாளர்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- கணக்காளர்: A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- கணினி தரவு பதிவாளர் (Data Entry Operator): O/L, ICT, A/L, Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- விற்பனை உதவியாளர்: (ஆண் / பெண்)
- சிட்டை எழுதுனர் : வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு உண்டு**

- யாழ்ப்பாணம் புத்தூரில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி




பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை. (முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)

**தொடர்பு: 076 9119 371**
**076 1653 129**

(CS 24790) A-1


## அன்பான அப்பாவுக்கு ஆண்டு ஒன்று



பிறப்பு 16.07.1951

இறப்பு 11.05.2022

### அமரர் மரியாம்பிள்ளை தேவரட்ணம் (தேவகிளி)

(உரிமையாளர் - Regina Transport, Regina Hardware, Regina Building )

அன்போடு அறிவையும் அள்ளித் தந்து
பண்போடு பாசத்தையும் பகிர்ந்து தந்து
கலையோடு கல்வியையும் கற்றுத் தந்து
கடவுளையும் உம் வாழ்வில் காணச் செய்தீர்கள்

ஏழைகளை எளியோரை அரவணைத்து
வார்த்தையையும் வாழ்வையும் ஒன்றாக்கி
செல்வம் கண்டும் செருக்கில்லாது
எல்லா மக்களின் நண்பனானீர்கள்

கவலையும் கண்ணீரும் மனதை அடைக்க
காண வேண்டும் உங்களை என நெஞ்சம் ஏங்க
கருணையின் தேவன் ஏற்பார் என்று
காருண்ய இறைவன் பாதம் வேண்டுகின்றோம்.

எமது அப்பாவின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று (11.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு ஆன்ம இளைப்பாற்றுக்காகச் செபிக்குமாறும் அதனைத் தொடர்ந்து எமது பருத்தித்துறை இல்லத்தில் நடைபெறும் மதிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி, குடத்தனை,
பருத்தித்துறை.

அப்பாவின் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 50356) AH-1

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் ஆரம்பகால பணியாளர்

**மாணிக்கம் அல்பிரட்**

அவர்கள் நேற்று (10.05.2023) காலமானார்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
**Kingstan Electronics Complex**
**No.62/31, Stanley Road, Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.